இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 184 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 02 – சனிக்கிழமை 14 பிப்ரவரி 2026 – வெளியூர் 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 184 : Thiruvalluvar Year - 2057 - Maasi 02 - Saturday 14 February 2026 - Dak 28 Pages ₹ 5.00

## மகளிர் உரிமைத் தொகையை நிறுத்த சூழ்ச்சி: முந்திக்கொண்டு முறியடித்தது ‘திராவிடமாடல்’ அரசு!

# ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ ஆதரவோடு 2026-லும் ஆட்சியைத் தொடர்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி !

**சென்னை, பிப்.14-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடர்பாக நேற்று (13-02-2026) சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள காணொலியில், “மகளிர் உரிமைத் தொகையை நிறுத்த செய்யப்படும் சூழ்ச்சியை முந்திக்கொண்டு முறியடித்தது ‘திராவிட மாடல்’ அரசு!” என்றும் “வெல்லும் தமிழ்ப் பெண்கள் ஆதரவோடு 2026-லும் ஆட்சியைத் தொடர்வோம்!” என்றும் உறுதியுடன் குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள காணொலியின் விவரம் வருமாறு:-

வணக்கம். மிக மிக முக்கியமான விஷயத்துக்காகத்தான் இந்தக் காணொலி! இன்றைக்குக் காலையில், நம் அரசின் சார்பில் 5 ஆயிரம் ரூபாய் உங்கள் கணக்கில் வந்திருக்கும். எதற்காக இந்தப் பணம்? நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற போது கொரோனா உச்சத்தில் இருந்தது. அதைச் சமாளித்து மக்களின் உயிரைக் காத்தது மட்டுமல்ல, அவர்கள் வாழ்வாதாரத்தைக் காக்க 4 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையையும் வழங்கினோம்.

சென்ற ஆட்சி விட்டுவிட்டுப் போன கடுமையான நிதி நெருக்கடியைச் சமாளித்து, ஆட்சிக்கு வந்ததுமே பல திட்டங்களை நிறைவேற்றினோம். நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று அறிவித்தேன். அப்போது, “இது சாத்தியமே இல்லை” எனச் சிலர் சொன்னார்கள்.

### ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையை மீறி மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 வழங்கினார்!

ஆனாலும், நிதி நெருக்கடியைச் சமா



ளித்து, ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையையும் மீறி, கடந்த 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் “கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட”த்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். முதலில், ஒரு கோடியே 13 லட்சம் மகளிருக்குப் பயனளித்த இந்தத் திட்டம், அண்மையில் விரிவுபடுத்தப்பட்டு, தற்போது ஒரு கோடியே 31 லட்சம் குடும்பத் தலைவிகள் பயன்பெற்று வருகிறார்கள். இது வெறும் நிதியுதவி அல்ல.

சமூகத்தில் பெண்கள் ஆற்றும் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காகக் கொடுக்கப்படுகிற உரிமைத்தொகை! இந்தத் தொகையை வைத்து, அன்றாட வீட்டுச் செலவுகள்,

குடும்பத்தில் ஏற்படும் மருத்துவச் செலவுகள்,

குழந்தைகளுக்கான கல்விச் செலவுகள்,

என, பல அத்தியாவசியச் செலவுகளை, மகளிர் தாங்களே நிறைவு செய்ய இந்தத் திட்டம் வழிவகுத்தது.

### ஒவ்வொரு குடும்பத் தலைவியும் எதிர்பார்க்கும் நாளாக அமைந்தது!

அதனால்தான், ஒவ்வொரு மாதமும் 15-ஆம் தேதி என்பது, ஒவ்வொரு குடும்பத்தலைவியும் ஆவலோடு எதிர்பார்க்கும் நாளாக அமைந்துள்ளது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்தத் திட்டத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்றி வருகிறார்கள். இந்த உரிமைத் தொகையை மேம்படுத்த வேண்டும் என நாம் செயல்பட்டு வந்தால், அதற்கு எதிராக டெல்லியில் இருக்கும் ஒரு கூட்டமும், தமிழ்நாட்டில் அவர்களுக்கு அடிமையாக இருக்கும் இன்னொரு கூட்டமும்,

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலைக் காரணம் காட்டி, அடுத்த 3 மாதங்களுக்கு இந்த மகளிர் உரிமைத் தொகையை நிறுத்த, சூழ்ச்சி செய்வதாகத் தகவல் வருகிறது! இதுபற்றி நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் சிலர் முயற்சி செய்வதாகச் செய்திகள் வருகிறது.

ஒரு கோடியே 31 லட்சம் மகளிர் உழைப்பை அங்கீகரிக்கும் இந்த திட்டத்தை 3 மாதம் நிறுத்தி வைத்தால் நீங்கள் எவ்வளவு சிரமங்களுக்கு ஆளாவீர்கள் என உங்கள் வீட்டில் ஒருவனாக இருக்கும் எனக்கு நன்றாகத் தெரியும். கடும் வெயிலில் வேலைக்குப் போக கடினமான கோடைக்காலத்தில், இந்தத் தொகை நிறுத்தப்பட்டால், உங்களுக்கு எவ்வளவு வலி ஏற்படும் என என்னால் உணர முடிகிறது.

### உரிமைத் தொகையை ரூ.2 ஆயிரமாக உயர்த்துவோம்!

#### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை. பிப்.14-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை வெளியிட்ட முக்கிய வலைதளப் பதிவில், “1.31 கோடி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளுக்கு இன்று காலை 5 ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டிருக்கிறது” என்றும் “திராவிட மாடல் அரசு 2.0 இல் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையை 2000 ரூபாயாக உயர்த்தி வழங்குவோம் ! இது, என் சகோதரிகளுக்கு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி !” என்றும் உணர்ச்சி மேலிட அறிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டு மகளிருக்கு இந்த ஸ்டாலின் தந்த உறுதிமொழிதான் உரிமைத்தொகை. யார் தடை ஏற்படுத்தினாலும் அதிலிருந்து பின்வாங்க மாட்டேன்.**

**தேர்தலைக் காரணம் காட்டி, மூன்று மாதங்களுக்கு உரிமைத் தொகையை முடக்கப் பார்க்கிறார்கள். முந்திக்கொண்டது நமது திராவிட மாடல் அரசு!**

**பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3 ஆயிரம் + கோடைக் காலச் சிறப்புத் தொகுப்பாக ரூ.2 ஆயிரம்!**

**1.31 கோடி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளுக்கும் இன்று காலை 5 ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டிருக்கிறது.**

**வெல்லும் தமிழ்ப் பெண்கள் ஆதரவோடு அடுத்தும் நாங்கள்தான் வெல்வோம்!**

**திராவிட மாடல் அரசு 2.0இல் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையை 2 ஆயிரமாக உயர்த்தி வழங்குவோம்! இது, என் சகோதரிகளுக்கு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி!**

**வெல்வோம் ஒன்றாக!**

இவ்வாறு அந்த வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தாய்மார்களின் சிரமங்களை அறிந்து உதவித்தொகை ரூ.5 ஆயிரம் வழங்க உத்தரவிட்டேன்!

உங்கள் மாதாந்திரச் செலவை, எப்படி சமாளிப்பீர்கள்? உங்கள் குடும்பத்தில் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மாத்திரை வாங்கிக் கொடுக்க முடியுமா? குழந்தைகள் தேர்வு எழுதும் காலத்தில் அவர்களுக்கு உணவு கொடுப்பதில் இருந்து, தேவையான கல்விச் செலவுகளைச் செய்ய முடியுமா? இந்தக் கஷ்டத்தை எல்லாம் நினைத்துப் பார்த்துதான், ஒரு முக்கியமான முடிவை எடுத்துள்ளேன். அதன்படி, இந்த பிப்ரவரி மாதம் மட்டுமில்லாமல் அடுத்த 2 மாதம்... அதாவது மார்ச், ஏப்ரலுக்கான உரிமைத்தொகை தவணைகளையும் சேர்த்து 3 ஆயிரம் ரூபாயும்,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## கடந்த 5 ஆண்டுகளைப்போல - இனியும்

# அனைவருக்குமான முதலமைச்சராகவே இருப்பேன்!

## 9,801 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் !




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.2.2026) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசின் பணியாளர் தெரிவு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2025ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொகுதி – IV உள்ளிட்ட போட்டித் தேர்வுகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 9801 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருமதி. என். கயல்விழி செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, பிப்.14-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.2.2026) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 9,801 வெற்றியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கி ஆற்றிய உரையில், “கடந்த 5 ஆண்டுகளைப்போல - இனியும் அனைவருக்குமான முதலமைச்சராகவே இருப்பேன்!” என பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

இன்று, Good Morning மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கு இது ஒரு Super Morningஆக அமைந்திருக்கிறது. பல தடைகளை, சூழ்ச்சிகளை முறியடித்து, இன்றைக்கு காலையில், 1 கோடியே 31 இலட்சம் சகோதரிகளுக்கு சிறப்பு தொகுப்பாக 5 ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத்தொகை வழங்கிவிட்டு, மிகுந்த மகிழ்ச்சியோடு, மனநிறைவோடு இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன். நீங்களும் வாழ்க்கையில் பல தடைகளை கடந்து, தேர்வில் வெற்றி பெற்று இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறீர்கள்.

### அனைத்து வகையிலும் தமிழ்நாட்டை உயர்த்த தொடர்ந்து பாடுபடுவேன்!

இன்று மகிழ்ச்சியோடு பொறுப்புணர்வும் எனக்கு கூடுதல் ஆகியிருக்கிறது. பதவி ஏற்றபோது சொன்னேன் - வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என நினைக்காமல், அனைவருக்குமான முதலமைச்சராக இருப்பேன் என்று சொன்னேன். அனைவருக்குமான முதலமைச்சராக தான் இந்த ஐந்து ஆண்டுகள் இருந்தேன். இனியும், அனைவரையும், அனைத்து வகையிலும் உயர்த்தக் கூடிய முதலமைச்சராக, தமிழ்நாட்டை தொடர்ந்து நம்பர்1 ஸ்டேட்டாக உயர்த்தக்கூடிய எண்ணத்தோடு, அந்தப் பொறுப்புணர்வு எனக்கு கூடியிருக்கிறது. கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்ற எனக்கு நீங்கள் தான் பக்கபலமாக இருக்கப் போகிறீர்கள்.

நம்முடைய நிர்வாகம் இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். மக்கள் நல திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்ற, அரசின் வருவாய்களை பெருக்க வேண்டும்; பொருளாதார வளர்ச்சியை தக்க வைக்கவேண்டும்; அடுத்த தலைமுறையை கைதூக்கி விடவேண்டும். அதற்கான மன உறுதியை நெஞ்சில் ஏந்தியபடி இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்திருக்கிறேன். நீங்களும் வாழ்க்கையில் பல தடைகளை கடந்து, தேர்வில் வெற்றி பெற்று, இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறீர்கள். நீங்களும் அப்படித்தான் ஃபீல் செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

### 5 ஆண்டுகளில் 1,55,131 பேருக்கு அரசு வேலை!

கல்வியில் சிறந்து, போட்டித் தேர்வுகளில் வென்று, மதிப்புமிக்க அரசு ஊழியர்களாக, போற்றுதலுக்குரிய ஆசிரியர்களாக பொறுப்பேற்கும் உங்கள் எல்லோரையும், அரசுப் பணிகளுக்கு வருக! வருக! என வரவேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்!

தொடர்ச்சி 3ஆம் பக்கம்